**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2021**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours / Gr -12 (2022) | 21 | T | I,II |

**அறிவுறுத்தல்கள் :–**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.***
- ***விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.***
- ***1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.***

## பகுதி – I

01. வள அருமைப்பிரச்சினை தோற்றம் பெற்றமைக்குரிய அடிப்படைக் காரணங்கள்?
   1) வரையறுக்கப்பட்ட மனித தேவைகளும் வரையறுக்கப்பட்ட வளங்களும்.
   2) வரையறுக்கப்பட்ட வளங்களும் வரையறுக்கப்பட்ட மனித விருப்பங்களும்.
   3) வரையறுக்கப்படாத மனித விருப்பங்களும் வரையறுக்கப்பட்ட வளங்களும்.
   4) வரையறுக்கப்படாத மனித விருப்பங்களும் வரையறுக்கப்படாத வளங்களும்.
   5) தேய்வடைந்து செல்லுகின்ற இயற்கை வளங்களும், அதிகரித்துச் செல்லுகின்ற மனித விருப்பங்களும். (……….)

02. அமையச் செலவு பூச்சியமாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று எனக்கருதப்பட **முடியாதது.**
   1) நிறைதொழில்மட்டப் பொருளாதாரம் குறித்த துறை சார்பாக உற்பத்தியை அதிகரிக்கும் போது.
   2) வளங்கள் யாவும் ஒரே ஒரு தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் போது.
   3) மாற்றுப்பயன்பாடு அற்ற வளப்பயன்பாட்டின் போது.
   4) அருமையற்ற வளங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தும் போது.
   5) குறைதொழில்மட்ட பொருளாதாரம் உற்பத்தியை அதிகரிக்கும் போது. (……….)

03. பின்வருவனவற்றுள் பேரினப்பொருளியல் விடயங்களை வெளிப்படுத்தும் சரியான விடை எது?
   A – பணநிரம்பல்
   B – பண்டமொன்றின் கேள்வி
   C – தொழில்வாய்ப்பு
   D – நாட்டின் சராசரி விலைகள்

   1) A, C, D  2) A, B, C  3) B, C, D  4) A, D, B  5) C, B, A (……….)

04. பின்வருவனவற்றில் எது கட்டாயமாக ஒரு **சிற்றினப் பொருளியல்** தலைப்பாகும்.
1) பண நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பு.
2) கோப்பியின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
3) கூலிமட்டங்களில் ஏற்படும் அதிகரிப்பு.
4) வருமானச்சமனின்மையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
5) இலங்கையின் வேலையின்மை வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி. (……….)

05. ''மனிதமூலதனம்'' என்பதனால் குறிப்பிடப்படுவது.
1) கட்டிடங்களும் பொறிகளுமாகும்.
2) மூலதனக் கருவிகளை உற்பத்தி செய்யப்பயன்படும் ஊழிய வளமாகும்.
3) சுகாதார மற்றும் கல்வித்துறை தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்படை.
4) தொழிற்படையின் திறன்கள் மற்றும் அறிவுத்திரட்சியாகும்.
5) மூலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றை ஒன்று சேர்த்தலாகும். (……….)

06. பொருளாதார வளத்திற்கு பொருத்தமான கூற்றுக்கள் பின்வருவனவற்றுள் எது?
A – உற்பத்தியில் பயன்படுத்தும் போது அமையச் செலவினைத் தோற்றுவிக்கும்.
B – மூலதனம், உழைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.
C – அருமைத்தன்மை காணப்படுவதில்லை.
D – நிரம்பல் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படும்.
E – ஆதன வளத்தை மட்டும் உள்ளடக்கியதாக காணப்படும்.
1) A, B, C  2) A, B, D  3) B, C, D  4) E, D, C  5) D, B, A (……….)

07. உற்பத்தியின் போது நிலையான அமையச் செலவு தோற்றம் பெறும் நிலைமையாக **அமையாதது** பின்வருவனவற்றுள் எது?
1) உற்பத்திச் சாத்திய வளையி நேர்கோடாக அமைவது.
2) வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தனவாக இருத்தல்.
3) தொழில்நுட்பமுறைகள் வேறுபடாமை.
4) வளங்கள் ஒத்ததன்மை வாய்ந்தனவாகக் காணப்படாமை.
5) ஒரு உற்பத்திக்கு வினைத்திறனான வளம் மற்றைய பொருள் உற்பத்திக்கு அதே வினைத்திறனைக் கொண்டிருத்ததுல். (……….)

08. நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையின் வழியே.
1) கிடைக்கக்கூடிய சகல வளங்களும் திறனாகப் பயன்படுத்தப்படுகின்றன.
2) தொழில்நுட்ப முன்னேற்றம் காணப்படும்.
3) அமையச்செலவின்றி கிடையச்சு உற்பத்தியை அதிகரிக்க முடிதல்.
4) கிடைக்கத்தக்க வளங்கள் சில பயன்படுத்தப்படவில்லை.
5) பொருளாதாரத்தில் உற்பத்தி வினைத்திறனின்மை நிலவுகிறது. (……….)

09. வளங்களின் விளைதிறனில் செல்வாக்குச் **செலுத்தாத காரணி** ஒன்று.
1) மனித மூலதனம்  2) தொழில்நுட்பம்  3) வளத்திரட்சி
4) முகாமைத்துவம்  5) தொழிற்பிரிப்பும் சிறப்புத்தேர்ச்சியும் (……….)

10. பொருளாதார வினைத்திறனை அடைவதற்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளைச் சரியாக வெளிப்படுத்தும் விடை எது?
   1) உற்பத்தி வினைத்திறனும், வளஒதுக்கீட்டு வினைத்திறனும்.
   2) நிறைதொழில் மட்டமும், பூரண உற்பத்தியும்.
   3) உற்பத்தி வினைத்திறனும், பூரண உற்பத்தியும்.
   4) நிறைதொழில் / மட்டமும், வளஒதுக்கீட்டு வினைத்திறனும்.
   5) விலையும் எல்லைச் செலவும் சமப்படுவதோடு, பூரண உற்பத்தியையும் கொண்டிருத்தல்.

(……….)

11. கட்டில்லாத சந்தைப் பொருளாதாரம் ஒன்றிலே விலைப்பொறிமுறையின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக **அமையாதது** எது?
   1) தூண்டற் தொழிற்பாடு.
   2) வள ஒதுக்கீட்டு தொழிற்பாடு.
   3) விலை உறுதி நிலையினைப் பேணுதல்
   4) சமிக்ஞை வழங்கும் தொழிற்பாடு
   5) வள ஒதுக்கீடும், ஊக்குவிப்பும் (……….)

12. பின்வருவனவற்றுள் எது **சமூக சந்தைப்** பொருளாதாரத்தின் பண்பாகக் காணப்படும்.
   1) அரசாங்கம் பொதுப்பண்டங்களை மட்டும் வழங்கும் செலவை மேற்கொள்ளும்.
   2) வளப்பயன்பாடு தொடர்பான தீர்மானத்தினை அரசாங்கமே மேற்கொள்ளும்.
   3) சாதனங்கள் அனைத்தும் அரச உடமையாகக் காணப்படும்.
   4) சமூக பாதுகாப்பு வலைப்பின்னலை வழங்குவதற்குரிய செலவை ஈடு செய்வதற்குரிய நிதியை அரசாங்கம் வரிகள் மூலமாக பெற்றுக்கொள்ளும்.
   5) விலைப்பொறி முறைமூலம் இலாப நோக்கில் அடிப்படைப் பொருளாதாரப்பிரச்சனைகள் தீர்க்கப்படும். (……….)

13. பண்டமொன்றின் கேள்வி மாற்றமடைவதில் செல்வாக்குடைய காரணியாக **கருதக்கூடியது.**
   1) மெய்வருமானம் வீழ்ச்சியடைதல்.
   2) பொருளின் விலைமாற்றம்.
   3) கொள்வனவாளர்களின் எண்ணிக்கையிலான மாற்றம்.
   4) வழங்கப்படும் தொகையில் ஏற்படும் மாற்றம்.
   5) சந்தை விரிவாக்கம் கட்டுப்படுத்தப்படல். (……….)


14. பதிலீட்டு விளைவு என்பது பின்வருவனவற்றில் ஒன்றின் காரணமாக கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றமாகும். அக்காரணியானது.
   1) மெய்வருமானம் மாறாத நிலையில் முழு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
   2) ஏனைய மாறாத நிலையில் குறித்த பண்டத்தின் விலையில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
   3) பண வருமானம் மாறாத நிலையில் சார்பு விலைகளில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
   4) சார்பு விலை மாறா நிலையில் பணவருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும்.
   5) சார்பு விலைகள் மாறா நிலையில் மெய்வருமானத்தில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். (……….)

15. பண்டமொன்றின் நிரம்பல் வளையியை வரையும் போது பின்வருவனவற்றுள் எது **மாறாததாகக் கொள்ளப்படுவதில்லை.**
   1) அரசாங்க கொள்கை.
   2) கையாளப்படும் தொழில்நுட்பம்.
   3) தொடர்புடைய பண்டத்தின் விலை.
   4) கவனத்தில் எடுக்கப்படும் பண்டத்தின் விலை.
   5) உள்ளீடுகளின் விலை. (……….)

16. சீனியும், சக்கரையும் நுகர்வு நடவடிக்கைகள் பலவற்றில் ஒன்றுக்கொன்று பதிலீடாகக் கருதப்படும். எனவே சீனியின் விலை அதிகரிக்கும் போது.

1) சக்கரைக்கான கேள்வி குறையும் என எதிர்பார்க்கலாம்.
2) சக்கரைக்கான கேள்வி அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.
3) சக்கரைக்கான விலை குறையும் என எதிர்பார்க்கலாம்.
4) சக்கரைக்கான கேள்வித்தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.
5) சக்கரைக்கான கேள்வித்தொகை குறையும் என எதிர்பார்க்கலாம். (……….)

17. குறித்த சாதாரண பண்டத்தின் கேள்வி கோடு $D_1 - D_2$ என நகர்வடைவதற்கு ஏதுவான சந்தர்ப்பம்.




1) நெருங்கிய தொடர்புடைய பதிலீட்டுப் பண்டத்தின் விலையில் ஏற்படும் குறைவு.
2) நெருங்கிய நிரப்புப் பண்டத்தின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.
3) எதிர்காலத்தில் விலை குறைவடையலாம் என்ற நுகர்வோர் எதிர்பார்ப்பு.
4) கொள்வனவாளர் எண்ணிக்கையில் ஏற்படும் குறைவு.
5) நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு. (……….)

18. பின்வருவனவற்றுள் எது பொருளொன்றின் நிரம்பல் வளையியை வலது புறமாக நகர்த்தும்?

1) குறித்த பொருளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு.
2) உள்ளீட்டுப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு.
3) தொடர்புடைய பொருட்களின் விலை மாற்றத்தினால் குறித்த பொருளின் சார்பு இலாபம் குறைதல்.
4) குறித்த பொருள் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் வழங்கிய மணியங்களை நிறுத்துதல்.
5) குறித்த பொருள் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அறவிட்ட வரியை நிறுத்துதல். (……….)

19. உற்பத்தியானரொருவர் மின்குமிழ் ஒன்றின் விலையை 10% இனால் குறைக்கிறார். அதன் விளைவாக மின்குமிழ்களின் விற்பனை அளவு 5% இனால் உயர்வடைகின்றது. மின்குமிழ்களுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி யாது?

1) $-0.4$ 2) $-0.5$ 3) $-2.5$ 4) $-4.0$ 5) $-10.0$ (……….)

20. கேள்வியின் வருமான நெகிழ்ச்சியானது எதிர்கணியமாக காணப்படின் குறித்த பண்டம்.

1) ஓர் ஆடம்பரப்பண்டமாகும் 2) ஓர் அத்தியாவசியப்பண்டமாகும்
3) ஓர் இழிவுப்பண்டமாகும் 4) ஓர் தொடர்பற்ற பண்டமாகும்
5) ஓர் சாதாரண தரப்பண்டமாகும் (……….)

## பகுதி II

❖ **ஏதாவது நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.**

### உப பிரிவு 'அ'

01. 1) பொருளியலில் ஆராயப்படும் அடிப்படை விடயங்கள் எவை? (3 புள்ளிகள்)

2) வள அருமை என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? அருமைப்பிரச்சனை ஏற்படுவதற்குரிய காரணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

3) பின்வருவன பொருளியலின் எவ்வகைக்குள் நீர் உள்ளடக்குவீர்.

அ) பொருளாதார வளர்ச்சி.

ஆ) நிறுவனம் ஒன்றின் செலவுகள்

இ) சந்தையில் நுகர்வோர் நடத்தைச் செயற்பாடு

ஈ) நாட்டின் சராசரி விலைகள் (4 புள்ளிகள்)

4) பொருளாதாரமல்லாத வளம் என்பதனை வரையறை செய்து? உதாரணம் தருக.(4 புள்ளிகள்)

5) ஊழிய விளைதிறன் என்றால் என்ன? ஊழிய விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (5 புள்ளிகள்)

02. 1) எந்தவொரு பொருளாதார முறைமையும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளும் எவை? (3 புள்ளிகள்)

2) பொருளாதார முறைமை என்றால் என்ன? பொருளாதார முறைமைகள் வேறுபடுவதற்குரிய முக்கிய காரணங்கள் யாவை? (5 புள்ளிகள்)

3) சந்தைப்பொருளாதாரம், கட்டளைப் பொருளாதாரம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

4) சமுதாய சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பண்புகள் யாவை? (4 புள்ளிகள்)

5) சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் விலையின் தொழிற்பாடுகள் வழங்கும் தொழிற்பாட்டினை விளக்குக? (4 புள்ளிகள்)

03. 1) உற்பத்தி இயல்தகவு வளையி அடிப்படையாகக் கொண்டுள்ள எடுகோள்கள் யாவை? (4 புள்ளிகள்)

2) உற்பத்தி இயல்தகவு எல்லையின் உட்புற நகர்வை ஏற்படுத்தும் காரணிகள் யாவை? (2 புள்ளிகள்)

3) அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு விதி என்பதனை விளக்குக. இவ்விதி தொழிற்படுகின்ற உற்பத்தி சாத்திய வளையியின் வடிவம் எவ்வாறு அமையும் என்பதனை வரைபடம் மூலம் காட்டுக. (4 புள்ளிகள்)

4) சோளம் மற்றும் புடவை உற்பத்தியில் ஈடுபடும் கூடிச்செல்லும் அமையச்செலவை எதிர்நோக்கும் நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையை வரைக? பின்வரும் நிகழ்வுகள் காரணமாக உற்பத்தி இயல்தகவு எல்லை எவ்வாறு மாற்றமடையுமெனக் காட்டுக.

அ) அதிக வறட்சி காரணமாக பயன்பாட்டிலுள்ள விவசாய நிலங்களின் அளவு 20% இனால் குறைவடைதல்.

ஆ) சோள உற்பத்தியில் புதிய விதை இனம் ஒன்று அறிமுகப்படுத்தப்படல்.

இ) இரு உற்பத்தித்துறையிலும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்படல்.

ஈ) புடவையில் புதிய தொழில்நுட்பமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்படல்.

உ) சோள உற்பத்தி 25 சதவீதத்தினாலும் புடவை உற்பத்தி 75 சதவீதத்தினாலும் அதிகரித்தல். (5 புள்ளிகள்)

5) உற்பத்தி சாத்திய வளையி ஒன்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் சிற்றினப்பொருளியல், பேரினப்பொருளியல் சார்ந்த விடயங்கள் இரண்டு வீதம் குறிப்பிட்டு அதில் ஒன்றினை உற்பத்தி சாத்திய வரைபடத்தில் காட்டுக? (5 புள்ளிகள்

04. 1) தேவை, கேள்வி என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)

2) கேள்வி விதி என்பதனை வரையறை செய்க? கேள்வி விதியினை விளக்குவதற்குப் பயன்படும் எடுகோள்கள் யாவை? (4 புள்ளிகள்)

3) தனிநபர்க்கேள்வியினை விளக்கி, அதனைத் தீர்மானிக்கும் காரணிகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

4) பண்டமொன்றின் விலையில் ஏற்படும் ஒரு மாற்றமானது மெய்வருமானம், குறிப்பிட்ட பண்டத்திற்கான கேள்வித்தொகை என்பவற்றில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக? (4 புள்ளிகள்)

5) கிபன் பண்டம் ஒன்றினைப் பொறுத்தவரை கேள்வியின் விலை நெகிழ்ச்சி நேரானதாகவும், வருமான நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும் காணப்படும். இக்கூற்றினை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? விளக்குக. (4 புள்ளிகள்)

05. 1) பண்டமொன்றின் நிரம்பல் என்றால் என்ன? அதனது வகைகளைத் தருக. (4 புள்ளிகள்)

2) பண்டமொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (4 புள்ளிகள்)

3) பண்டமொன்றின் நிரம்பலில் குறைவு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? (4 புள்ளிகள்)

4) பண்டமொன்றின் விலை ரூ 10 இலிருந்து ரூ 20 ஆக உயர்வடைந்த போது, அதனது நிரம்பல் தொகையானது 200 அலகுகளில் இருந்து 500 அலகுகளாக உயர்வடைந்தது எனக் கருதிக்கொள்வது.

அ) நிரம்பல் அட்டவனையைத் தயாரிக்குக? (1 புள்ளி)

ஆ) நிரம்பல் சமன்பாட்டினை உருவாக்குக? (2 புள்ளிகள்)

இ) நிரம்பல் கோட்டினை வரைக? (2 புள்ளிகள்)

5) பண்டமொன்றின் விலைக்கும் அதனது நிரம்பல் தொகைக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படுவதற்கான காரணங்கள் யாவை? (3 புள்ளிகள்)

06. 1) விலைசார் கேள்வி நெகிழ்ச்சி என்றால் என்ன? (4 புள்ளிகள்)

2) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (4 புள்ளிகள்)

3) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் வகைகளைத் தருக. (4 புள்ளிகள்)

4) விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் நடைமுறை முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

5) X எனும் பண்டம் தொடர்பில் நுகர்வோன் வருமானம் 20% இனால் அதிகரித்த போது அப்பண்டத்திற்கு கேள்வி 30% ஆக குறைவடைகின்ற வருமான நெகிழ்ச்சிக்குணகத்தை கணிப்பிடுக. பண்டத்தின் தன்மைபற்றி யாது கூறுவீர்? (4 புள்ளிகள்)